செ.வெ.எண்: 34 நாள்: 12.01.2026

# புதுக்கோட்டை மாவட்டம்

## பத்திரிகைச் செய்தி

---

கடல் ஆமை மற்றும் கடற்பசுக்கள் அழிந்துவரும் இனம் ஆகும். வன உயிரின பாதுகாப்பு சட்டம் 1972– ன்படி அவை பாதுகாக்கப்பட வேண்டும். மேலும், அவைகளை பிடிக்க தடை விதிக்கப்பட்டுள்ளது. புதுக்கோட்டை மாவட்டம், கட்டுமாவடி முதல் ஏனாதி வரையிலான கடலோர பகுதியில் கடல் ஆமைகள் இனப்பெருக்க காலமான ஜனவரி 01 முதல் 30 வரையிலான காலக்கட்டத்தில் கடல் ஆமைகளை இனப்பெருக்கத்திற்கு கடற்கரையோர பகுதிகளுக்கு வர வாய்ப்பு உள்ளது. புதுக்கோட்டை மாவட்டத்தில் அம்மாப்பட்டினம், பொன்னகரம், கீழக்குடியிருப்பு மற்றும் கட்டுமாவடி பகுதியில் கடற்பசு அதிகமாக காணப்படும் பகுதிகள் ஆகும். இப்பகுதிகள் கடற்பசு பாதுகாப்பு பகுதிகளாக வரையறை செய்யப்பட்டுள்ளது.

எனவே, புதுக்கோட்டை மாவட்டத்திலுள்ள மீனவ கிராமங்களிலுள்ள மீனவர்கள் மீன்பிடிக்க செல்லும் போது வலையில் கடல் ஆமைகள் மற்றும் கடற்பசு எதிர்பாராவிதமாக பிடிப்பட்டால் அவைகளை கடலிலே திரும்ப விட்டு விட வேண்டும். அவ்வாறு கடல் ஆமை மற்றும் கடற்பசுக்களை பாதுகாத்தல் தொடர்பாக, தனது வலையில் பிடிபடும் கடல் ஆமை மற்றும் கடற்பசுக்களை மீண்டும் கடலிலே பாதுகாப்பாக விட்டு அதன் விவரத்தினை தெரிவித்தால் அதன்படி வனத்துறைக்கு பரிந்துரை செய்து சம்மந்தப்பட்ட மீனவருக்கு வனத்துறையின் மூலம் ஊக்கத்தொகை வழங்கிட நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவிக்கப்படுகிறது.

மேலும், கடற்கரை பகுதியில் ஒதுங்கும் கடல் ஆமை மற்றும் கடற்பசுக்களை கடலிலே திரும்ப விடவும், அறிவுறுத்தப்படுகிறது. இதனை மீறி கடல் ஆமை மற்றும் கடற்பசுக்களை பாதுகாக்காமல் அவைகளை சட்ட விரோதமாக பிடிக்கும் மீனவர்களுக்கு தமிழ்நாடு கடல் மீன்பிடி ஒழுங்குபடுத்தும் சட்டம் 1983, திருத்தம் 2016–ன்படி கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும், மேலும் வனத்துறை சட்டத்தின்படி நடவடிக்கை எடுத்திட பரிந்துரை செய்யப்படும் எனவும், தெரிவிக்கப்படுகிறது. எனவே, புதுக்கோட்டை மாவட்டத்திலுள்ள கடலோர மீனவர்களக்கு கடல் ஆமைகளை பாதுகாப்பது தொடர்பாக விழிப்புணர்வு கூட்டம் நடத்தி மீன்வளத்துறையால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. எனவே, கடல் ஆமை மற்றும் கடற்பசுக்களை பாதுகாக்க வேண்டும் என மீனவர்களை மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறையால் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

மேற்கண்ட தகவலை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.மு.அருணா, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

---

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**

புதுக்கோட்டை மாவட்ட செய்திகளை உடனுக்குடன் தெரிந்துக்கொள்ள:

Pro Pudukkottai    PRO PDKT    @PRO_Pudukkottai    Pro.Pudukkottai